**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – தொழிற்கல்வி – பாடத்திட்டம் – மேல்நிலைக் கல்வி – 2018–19 ஆம் கல்வியாண்டு – தொழிற்கல்வி - கலைப்பிரிவு — பாடப்பிரிவுகளில் உள்ள பாடப் பெயர்கள் மாற்றம் மற்றும் முதன்மைப் பாடங்கள் மாற்றம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வி (பக7(1)த் துறை**

அரசாணை (நிலை) எண்.152 — நாள் 24.07.2018
திருவள்ளுவர் ஆண்டு, 2049,
ஆடி, 8

படிக்கப்பட்டவை :

1. அரசாணை (நிலை) எண்.99, பக (க.ஆப.)துறை, நாள் 22.05.2017
2. அரசாணை (நிலை) எண்.146, பக(கஆப) துறை, நாள் 30.06.2017
3. அரசாணை (நிலை) எண்.147, பக(கஆப) துறை, நாள் 30.06.2017
4. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் கடித ந.க.எண்.2238/D2/2018, நாள் 10.05.2018.
5. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண். 33741/ பிடி2/இ2/2018, நாள் 06.07.2018.

*****

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் உலகளவில் வளர்ந்து வரும் அறிவியல், சமூக பொருளாதார வளர்ச்சிகளையும் மாற்றங்களையும் கருத்தில் கொண்டு பாடத்திட்டத்தில் மாற்றம் செய்ய வேண்டியது அவசியமானதாகும் என்பதாலும் தமிழக மாணவர்கள் அனைத்து வகையான போட்டித் தேர்வுகளிலும் கலந்து கொண்டு வெற்றி பெறத்தக்க வகையில் அவர்களைத் தயார் செய்ய வேண்டியது இத்துறையின் மிகப்பெரிய கடமையாகும் என்பதாலும் ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பாடத்திட்டம் மற்றும் பாடப்புத்தகங்களை மாற்றி அமைத்திட ஆணையிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து, 2018–19ஆம் கல்வியாண்டிற்கு 1, 6, 9 மற்றும் 11ஆம் வகுப்புகளுக்குப் புதிய பாடத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டு, மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவது மற்றும் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில், தற்போது உள்ள கல்வி முறையை மேம்படுத்த கலைத்திட்ட வடிவமைப்புக் குழு மற்றும் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டன. இந்நேர்வு தொடர்பாக 03.05.2018 அன்று நடைபெற்ற கூட்டத் தீர்மானங்களின்படி, 2018–2019–ஆம் கல்வியாண்டில் தொழிற்கல்வி மற்றும் கலைப் பிரிவுகளில் முதன்மைப் பாடப்பிரிவுகளின் பெயர்கள்

மற்றும் முதன்மை பாடங்களில் மாற்றம் செய்து கலைத்திட்ட வடிவமைப்புக் குழு மற்றும் உயர்மட்டக்குழு ஆகியவை பரிந்துரை செய்துள்ளன. அக்குழுக்களின் பரிந்துரையினை ஏற்று, நடைமுறைப்படுத்த மாநில பொதுப் பள்ளிக் கல்வி வாரியம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

3. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர், இதுவரை கணினி அறிவியல் என்ற பாடம் மட்டுமே அனைத்து பிரிவுகளுக்கும் (அறிவியல் / கலைப் பிரிவுகளுக்கு) இருந்து வருகின்றது, இதில் சில பாடப்பகுதிகள் கலைப்பிரிவில் படிக்கும் மாணவர்களுக்கு கடினமாகவும், மேம்படுத்தப்பட்டதாகவும் (Advanced) இருந்தது. மேலும், கலைத்திட்ட வடிவமைப்புக் குழுவினர், வணிகவியல் பாடத்தில் டேலி (Tally) முதலியனவும், தொழிற்கல்விப் பிரிவில் உடனடி வேலைவாய்ப்புக்கு ஏற்றதாகவும் இருக்குமாறும், மாணவர்கள் படிக்கும் பாடப்பிரிவுகளுக்கு தகுந்தவாறு கணினி அறிவியல் பாடத்தினை இணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு மூன்று வகைகளாக நடப்புக் கல்வியாண்டு (2018–2019) முதல் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது என்று தெரிவித்துள்ளதாக, மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார். இந்நிலையில்,

a) மேல்நிலைப் பாடப்பிரிவுகளில் தொழிற்கல்வி பாடப்பிரிவுகளின் பெயர்கள் மாற்றம் செய்துள்ளமைக்கும்;

b) தொழிற்கல்வி பாடப்பிரிவுகள் மற்றும் கலைப்பிரிவுகளில் உள்ள முதன்மைப் பாடங்களில் மாற்றம் செய்துள்ளமைக்கும்;

c) வணிக கணிதமும் புள்ளி இயலும், அறவியலும் இந்திய பண்பாடும், செவிலியம் பொது என்று பாடப்பெயர்கள் மாற்றம் செய்துள்ளமைக்கும்;

d) புதிய தொழிற்கல்வி மற்றும் கலைப்பிரிவு பாடப்பிரிவுகளின் பெயர் மற்றும் முதன்மைப்பாடங்கள் மாற்றம் 2018–19 ஆம் கல்வியாண்டில் +1 வகுப்பிற்கும், 2019–2020 ஆம் கல்வியாண்டில் +2 வகுப்பிற்கும் நடைமுறைப்படுத்திடவும்

அரசாணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கோரியுள்ளார்.

4. மேலே பத்தி மூன்றில் உள்ள பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்கலாம் என முடிவு செய்து, அவ்வாறே

1) மேல்நிலைப் பாடப்பிரிவுகளில் முதன்மை பாடமான கணினி அறிவியல் பாடத்தினை இணைப்பு 1–இல் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றம் செய்துள்ளமைக்கும்; தொழிற்கல்வி பாடப்பிரிவுகள் மற்றும் கலைப் பிரிவுகளில் உள்ள முதன்மைப் பாடங்களில் இணைப்பு 2–இல்

குறிப்பிட்டுள்ளவாறு மாற்றம் செய்துள்ளமைக்கும்; வணிக கணிதமும் புள்ளி இயலும், அறவியலும் இந்திய பண்பாடும், செவிலியம் பொது என்ற பாடப்பெயர்களை இணைப்பு 3-இல் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றம் செய்துள்ளமைக்கும் ஒப்புதல் அளித்தும்,

2) மேலும், புதிய தொழிற்கல்வி மற்றும் கலைப்பிரிவு பாடப்பிரிவுகளின் பெயர் மற்றும் முதன்மைப் பாடங்களின் மாற்றம் 2018-19-ஆம் கல்வியாண்டில் +1 வகுப்பிற்கும், 2019-2020-ஆம் கல்வியாண்டில் +2 வகுப்பிற்கும் நடைமுறைப்படுத்திட அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

**பெறுநர்**
பள்ளிக் கல்வி இயக்குநர்,
சென்னை-6.

**நகல்**
இயக்குநர், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை-6.
மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர், சென்னை-6.
அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை -6.
பள்ளிக் கல்வித் துறையின் பிற துறைத் தலைவர்கள், சென்னை-6/2.
முதன்மைக் கல்வி அலுவலர்கள்/மாவட்டக் கல்வி அலுவலர்கள் (பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக)
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
நேர்முக உதவியாளர் , சென்னை-9.
பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளரின்
முதுநிலை முதன்மைத் தனிச் செயலாளர், சென்னை-9.
பள்ளிக் கல்வித் துறையின் அனைத்து அலுவலர்கள் / பிரிவுகள்
இருப்பு கோப்பு/ உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

அரசாணை (நிலை) எண். 152 பள்ளிக் கல்வி (பக7(1)த் துறை, நாள் 24.07.2018–இன்

## இணைப்பு–1

### மேல்நிலைப் பாடப்பிரிவுகளில் முதன்மைப் பாடமான கணினி அறிவியல் பாடத்தில் மாற்றம்

| | பாடப்பிரிவு | முதன்மைப் பாடங்களில் ஒன்று |
| --- | --- | --- |
| I. | அறிவியல் பிரிவு (இயற்பியல், வேதியியல், கணிதம்) | கணினி அறிவியல்<br>Computer Science |
| II. | 1. கலைப்பிரிவு (வணிகவியல், கணக்குப் பதிவியல், பொருளியல்)<br>2. கலைப்பிரிவு (வரலாறு, புவியியல், பொருளியல்)<br>3. தொழிற்கல்வி பிரிவு–கணக்குப் பதிவியலும் தணிக்கையியலும். | கணினிப் பயன்பாடுகள்<br>Computer Applications |
| III. | தொழிற் கல்வி (Vocational Education)<br>பத்து பிரிவுகள்<br>1. அடிப்படை இயந்திரவியல்<br>2. அடிப்படை மின் பொறியியல்<br>3. அடிப்படை மின்னணு பொறியியல்<br>4. அடிப்படை கட்டடப் பொறியியல்<br>5. அடிப்படைத் தானியங்கி ஊர்தி பொறியியல்.<br>6. நெசவியல் தொழில்நுட்பம்<br>7. செவிலியம்<br>8. நெசவியலும் ஆடை வடிவமைப்பும்<br>9. உணவக மேலாண்மை<br>10. வேளாண் அறிவியல். | கணினி தொழில் நுட்பம்<br>Computer Technology |

## இணைப்பு–2

### தொழிற்கல்வி பாடப்பிரிவுகள் மற்றும் கலைப்பிரிவுகளில் உள்ள முதன்மைப் பாடங்கள் மாற்றம்

| தொழிற்கல்வி பாடப்பிரிவுகள் – VOCATIONAL EDUCATION GROUPS | | | | |
|---|---|---|---|---|
| தற்போதுள்ள பாடப் பிரிவுகள் | | | புதியதாக வழங்கப்படும் பாடப்பிரிவுகள் | |
| வ. எண் | பிரிவின் பெயர் GROUP NAME | முதன்மைப் பாடங்கள் MAIN SUBJECTS | பிரிவின் பெயர் GROUP NAME | மாற்றியமைக்கப்படும் முதன்மைப் பாடங்கள் I & II year – MAIN SUBJECTS |
| 1. | பொது இயந்திரவியல் General Machinist | **முதலாம் ஆண்டு**<br>1. கணிதம் Mathematics<br>2. பொறியியல் வரைபடம் Engineering Drawing – Theory<br>3. பணிமனை பொறியியல் Workshop Engineering – Theory<br>4. பொது இயந்திரவியல்- செய்முறை General Machinist – Practical<br><br>**இரண்டாம் ஆண்டு**<br>1. கணிதம் Mathematics<br>2. பொது இயந்திரவியல் – கருத்தியல் General Machinist – Theory<br>3. பொது இயந்திரவியல் செய்முறை–I General Machinist – Practical – I<br>4. பொது இயந்திரவியல் செய்முறை–II General Machinist –Practical II | அடிப்படை இயந்திரவியல் Basic Mechanical Engineering | **முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு**<br>1. கணிதம் Mathematics<br>2. அடிப்படை இயந்திரவியல் – கருத்தியல் Basic Mechanical Engineering –Theory<br>3. கணினி தொழில்நுட்பம் Computer Technology<br>4. அடிப்படை இயந்திரவியல் – செய்முறை Basic Mechanical Engineering Practical |

<table>
<tr>
<td>2.</td>
<td>மின்<br>இயந்திரங்களும்<br>சாதனங்களும்<br>Electrical Machines and Appliances</td>
<td>முதலாம் ஆண்டு<br><br>1. கணிதம்<br>Mathematics<br>2. மின்னியல் – கருத்தியல் I<br>Electrical Engineering – Theory – I<br>3. இயந்திரப் பொறியியலும், வரைபடமும்– கருத்தியல்– II<br>Engineering Mechanics and Electrical Drawing Theory – II<br>4. மின் ஒயரிங் செய்முறை<br>Electrical Wiring Practical<br><br>இரண்டாம் ஆண்டு<br><br>1. கணிதம்<br>Mathematics<br>2. மின் இயந்திரங்களும் சாதனங்களும்– கருத்தியல்<br>Electrical Machines and Appliances – Theory<br>3. மின் இயந்திரங்களும் சாதனங்களும் – செய்முறை I<br>Electrical Machines and Appliances – Practical I<br>4. மின் இயந்திரங்களும் சாதனங்களும்– செய்முறை II<br>Electrical Machines and Appliances – Practical II</td>
<td>அடிப்படை மின் பொறியியல்<br>Basic Electrical Engineering</td>
<td>1. கணிதம்<br>Mathematics<br><br>2. அடிப்படை மின் பொறியியல் – கருத்தியல்<br>Basic Electrical Engineering – Theory<br><br>3. கணினி தொழில்நுட்பம்<br>Computer Technology<br><br>4. அடிப்படை மின் பொறியியல்– செய்முறை<br>Basic Electrical Engineering – Practical</td>
</tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | மின்னணு சாதனங்கள்<br>Electronic Equipments | முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு<br>1. கணிதம்<br>Mathematics<br>2. மின்னணு சாதனங்கள் – கருத்தியல்<br>Electronic Equipments – Theory<br>3. மின்னணு சாதனங்கள் – செய்முறை I<br>Electronic Equipments – Practical I<br>4. மின்னணு சாதனங்கள் – செய்முறை II<br>Electronic Equipments – Practical II | அடிப்படை மின்னணு பொறியியல்<br>Basic Electronics Engineering | முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு<br>1. கணிதம்<br>Mathematics<br>2. அடிப்படை மின்னணு பொறியியல் – கருத்தியல்<br>Basic Electronics Engineering – Theory<br>3. கணினி தொழில்நுட்பம்<br>Computer Technology<br>4. அடிப்படை மின்னணு பொறியியல் – செய்முறை<br>Basic Electronics Engineering – Practical |
| 4. | கட்டடப்பட வரைவாளர்<br>Draughtsman Civil | முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு<br>1. கணிதம்<br>Mathematics<br>2. கட்டடப்பட வரைவாளர் – கருத்தியல்<br>Draughtsman Civil – Theory<br>3. கட்டடப்பட வரைவாளர்– செய்முறை I<br>Draughtsman Civil – Practical I<br>4. கட்டடப்பட வரைவாளர் – செய்முறை II<br>Draughtsman Civil – Practical II | அடிப்படை கட்டடப் பொறியியல்<br>Basic Civil Engineering | முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு<br>1. கணிதம்<br>Mathematics<br>2. அடிப்படை கட்டடப் பொறியியல் – கருத்தியல்<br>Basic Civil Engineering – Theory<br>3. கணினி தொழில்நுட்பம்<br>Computer Technology<br>4. அடிப்படை கட்டடப் பொறியியல் – செய்முறை<br>Basic Civil Engineering – Practical |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | ஆட்டோ மெக்கானிக்<br>Auto Mechanic | முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு<br>1. கணிதம்<br>Mathematics<br>2. ஆட்டோ மெக்கானிக் - கருத்தியல்<br>Auto Mechanic - Theory<br>3. ஆட்டோ மெக்கானிக் - செய்முறை I<br>Auto Mechanic - Practical I<br>4. ஆட்டோ மெக்கானிக் - செய்முறை II<br>Auto Mechanic - Practical II | அடிப்படை தானியங்கி ஊர்தி பொறியியல்<br>Basic Automobile Engineering | முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு<br>1. கணிதம்<br>Mathematics<br>2. அடிப்படை தானியங்கி ஊர்தி பொறியியல் - கருத்தியல்<br>Basic Automobile Engineering - Theory<br>3. கணினி தொழில்நுட்பம்<br>Computer Technology<br>4. அடிப்படை தானியங்கி ஊர்தி பொறியியல் - செய்முறை<br>Basic Automobile Engineering - Practical |
| 6. | நெசவியல் தொழில்நுட்பம்<br>Textile Technology | முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு<br>1. கணிதம்<br>Mathematics<br>2. நெசவியல் தொழில்நுட்பம் - கருத்தியல்<br>Textile Technology -- Theory<br>3. நெசவியல் தொழில்நுட்பம் - செய்முறை I<br>Textile Technology - Practical I<br>4. நெசவியல் தொழில்நுட்பம் - செய்முறை II<br>Textile Technology - Practical II | நெசவியல் தொழில் நுட்பம்<br>Textile Technology | முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு<br>1. கணிதம்<br>Mathematics<br>2. நெசவியல் தொழில்நுட்பம் - கருத்தியல்<br>Textile Technology - Theory<br>3. கணினி தொழில்நுட்பம்<br>Computer Technology<br>4. நெசவியல் தொழில்நுட்பம் - செய்முறை<br>Textile Technology - Practical |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | செவிலியம்<br>Nursing | **முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு**<br>1. உயிரியல்<br>Biology<br>2. செவிலியம் – கருத்தியல்<br>Nursing – Theory<br>3. செவிலியம் – செய்முறை I<br>Nursing – Practical I<br>4. செவிலியம் – செய்முறை II<br>Nursing – Practical II | செவிலியம்<br>Nursing | **முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு**<br>1. உயிரியல்<br>Biology<br>2. செவிலியம் – கருத்தியல்<br>Nursing – Theory<br>3. கணினி தொழில்நுட்பம்<br>Computer Technology<br>4. செவிலியம் – செய்முறை<br>Nursing Practical |
| 8. | துணிகளும் ஆடை வடிவமைப்பும்<br>Textiles and Designing | **முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு**<br>1. மனையியல்<br>Home Science<br>2. துணிகளும் ஆடை வடிவமைப்பும் – கருத்தியல்<br>Textiles and Designing – Theory<br>3. துணிகளும் ஆடை வடிவமைப்பும் – செய்முறை I<br>Textiles and Designing – Practical I<br>4. துணிகளும் ஆடை வடிவமைப்பும் – செய்முறை II<br>Textiles and Designing – Practical II | நெசவியலும் ஆடை வடிவமைப்பும்<br>Textiles and Dress Designing | **முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு**<br>1. மனையியல்<br>Home Science<br>2. நெசவியலும் ஆடை வடிவமைப்பும் – கருத்தியல்<br>Textiles and Dress Designing – Theory<br>3. கணினி தொழில்நுட்பம்<br>Computer Technology<br>4. நெசவியலும் ஆடை வடிவமைப்பும் – செய்முறை<br>Textiles and Dress Designing Practical |

| | | | | |
|---|---|---|---|---|
| 9. | உணவு மேலாண்மையும் குழந்தை நலனும்<br>Food Management and Child Care | முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு<br>1. மனையியல்<br>Home Science<br>2. உணவு மேலாண்மையும் குழந்தை நலனும் - கருத்தியல்<br>Food Management and Child Care– Theory<br>3. உணவு மேலாண்மையும் குழந்தை நலனும் - செய்முறை I<br>Food Management and Child Care Practical I<br>4. உணவு மேலாண்மையும் குழந்தை நலனும் - செய்முறை II<br>Food Management and Child Care Practical II | உணவக மேலாண்மை<br>Food Service Management | முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு<br>1. மனையியல்<br>Home science<br>2. உணவக மேலாண்மை - கருத்தியல்<br>Food Service Management - Theory<br>3. கணினி தொழில்நுட்பம்<br>Computer Technology<br>4. உணவக மேலாண்மை - செய்முறை<br>Food Service Management - Practical |
| 10. | வேளாண்மைச் செயல்முறைகள்<br>Agricultural Practices | முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு<br>1. உயிரியல்<br>Biology<br>2. வேளாண்மைச் செயல்முறைகள் - கருத்தியல்<br>Agricultural Practices – Theory<br>3. வேளாண்மைச் செயல்முறைகள் - செய்முறை I<br>Agricultural Practices – Practical I<br>4. வேளாண்மைச் செயல்முறைகள் - செய்முறை II<br>Agricultural Practices – Practical II | வேளாண் அறிவியல்<br>Agricultural Science | முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு<br>1. உயிரியல்<br>Biology<br>2. வேளாண் அறிவியல் - கருத்தியல்<br>Agricultural Science - Theory<br>3. கணினி தொழில்நுட்பம்<br>Computer Technology<br>4. வேளாண் அறிவியல் - செய்முறை<br>Agricultural Science - Practical |

<table>
<tr>
<td rowspan="2">11.</td>
<td rowspan="2">அலுவலக செயலாண்மை<br>Office Secretaryship</td>
<td>முதலாம் ஆண்டு<br>1. வணிகவியல்<br>Commerce<br><br>2. கணக்குப் பதிவியல்<br>Accountancy<br><br>3. மேலாண்மை தத்துவங்கள் – கருத்தியல்<br>Management Principles – Theory<br><br>4. தட்டச்சு மற்றும் கணினி கல்வி – செய்முறை<br>Typewriting and Computer Education – Practical</td>
<td rowspan="2">அலுவலக மேலாண்மையும் செயலியலும்<br>Office Management and Secretaryship</td>
<td rowspan="2">முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு<br>1. வணிகவியல்<br>Commerce<br><br>2.கணக்குப் பதிவியல்<br>Accountancy<br><br>3.அலுவலக மேலாண்மையும் செயலியலும் – கருத்தியல்<br>Office Management and Secretaryship – Theory<br><br>4.தட்டச்சும் கணினி பயன்பாடுகளும் – செய்முறை<br>Typography and Computer Applications –Practical</td>
</tr>
<tr>
<td>இரண்டாம் ஆண்டு<br>1. வணிகவியல்<br>Commerce<br><br>2. கணக்கு பதிவியல்<br>Accountancy<br><br>3. அலுவலக மேலாண்மை – கருத்தியல்<br>Office Management – Theory<br><br>4. செய்முறை I தட்டச்சு<br>Practical I – Typewriting</td>
</tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| 12. | கணக்குப் பதிவியலும் தணிக்கையியலும்<br>Accountancy and Auditing | முதலாம் ஆண்டு<br>1. வணிகவியல்<br>Commerce<br>2. மேலாண்மை தத்துவங்களும் நுட்பங்களும்<br>Management Principles and Techniques<br>3. கணக்குப் பதிவியல்<br>Accoutancy<br>4. பொருளியல்<br>Economics<br><br>இரண்டாம் ஆண்டு<br>1. வணிகவியல்<br>Commerce<br>2. கணக்குப் பதிவியலும் தணிக்கையியலும் - கருத்தியல்<br>Accountancy and Auditing - Theory<br>3. கணக்குப் பதிவியலும் தணிக்கையியலும் – செய்முறை I<br>Accountancy and Auditing - Practical I<br>4. கணக்குப் பதிவியலும் தணிக்கையியலும் - செய்முறை II<br>Accountancy and Auditing – Practical II | கணக்குப் பதிவியலும் தணிக்கை யியலும்<br>Accountancy and Auditing | முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு<br>1. வணிகவியல்<br>Commerce<br>2. கணக்குப் பதிவியல்<br>Accountancy<br>3. கணினிப் பயன்பாடுகள்<br>Computer Applications<br>4. தணிக்கையியல் - செய்முறை<br>Auditing– Practical |

| கலைப்பிரிவுகள் - ARTS GROUPS | | | | |
|---|---|---|---|---|
| தற்போதுள்ள பாடப் பிரிவுகள் | | | புதியதாக வழங்கப்படும் பாடப்பிரிவுகள் | |
| வ. எண் | பிரிவின் பெயர் GROUP NAME | முதன்மைப் பாடங்கள் MAIN SUBJECTS | பிரிவின் பெயர் GROUP NAME | மாற்றியமைக்கப்படும் முதன்மைப் பாடங்கள் I & II year – MAIN SUBJECTS |
| 13. | கலைப் பிரிவு – 1<br>Arts Group – 1 | முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு<br>1. வணிகவியல் Commerce<br>2. கணக்குப் பதிவியல் Accountancy<br>3. பொருளியல் Economics<br>4. கணினி அறிவியல் Computer Science | கலைப் பிரிவு – 1<br>Arts Group – 1 | முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு<br>1. வணிகவியல் Commerce<br>2. கணக்குப் பதிவியல் Accountancy<br>3. பொருளியல் Economics<br>4. கணினிப் பயன்பாடுகள் Computer Applications |
| 14. | கலைப் பிரிவு – 2<br>Arts Group – 2 | முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு<br>1. வரலாறு History<br>2. புவியியல் Geography<br>3. பொருளியல் Economics<br>4. கணினி அறிவியல் Computer Science | கலைப் பிரிவு – 2<br>Arts Group – 2 | முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு<br>1. வரலாறு History<br>2. புவியியல் Geography<br>3. பொருளியல் Economics<br>4. கணினிப் பயன்பாடுகள் Computer Applications |

## இணைப்பு–3

### பாடப் பெயர்கள் மாற்றம்

| வ. எண் | தற்போதுள்ள பாடப் பெயர்கள் | புதியதாக வழங்கப்பட்டுள்ள பாடப் பெயர்கள் |
|---|---|---|
| 15. | வணிகக் கணிதம்<br>Business Mathematics | வணிகக் கணிதமும் புள்ளியியலும்<br>Business Mathematics and Statistics<br>Both +1 &+2 |
| 16. | அறவியல்<br>Ethics in +1<br>இந்தியப் பண்பாடு<br>Indian Culture in +2 | அறவியலும் இந்தியப் பண்பாடும்<br>Ethics and Indian Culture<br>(Both +1 &+2) |
| 17. | செவிலியியல்(பொது) தாள் I மற்றும் II<br>General Nursing Paper I and II | செவிலியம் -பொது<br>(+1 மற்றும் +2 வகுப்புகளுக்கு ஒரே தொகுதியாக)<br>Nursing -General<br>(Single volume for both +1 &+2) |

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்